©
GOVERNMENT OF TAMIL NADU
2010

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 8.80 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 342A] சென்னை, புதன்கிழமை, நவம்பர் 10, 2010
ஐப்பசி 24, திருவள்ளுவர் ஆண்டு — 2041

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

### பொருளடக்கம்

| **சட்டமுன்வடிவுகள் :** | *பக்கங்கள்* |
|---|---|
| எண் 29/2010—தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டம் .. .. .. .. | 2–4 |
| எண் 30/2010—தமிழ்நாடு (நகராட்சிப் பகுதிகளில்) சொத்துரிமை மாற்றங்களின் மீதான தீர்வை திருத்தச் சட்டம் .. .. | 5–6 |
| எண் 31/2010—தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டம் .. .. .. .. | 7–8 |
| எண் 32/2010—தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டம் .. .. .. .. | 9–10 |
| எண் 33/2010—தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காம் திருத்தச்) சட்டம் .. .. .. .. | 11–12 |
| எண் 34/2010—தமிழ்நாடு தமிழ்மொழி மூலமாக படித்த நபர்களை அரசின் கீழ்வரும் பணிகளில் முன்னுரிமை அடிப்படையில் நியமனம் செய்தல் சட்டம் .. .. .. .. | 13–18 |
| எண் 35/2010—தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டம் .. .. .. .. | 19–20 |
| எண் 36/2010—தமிழ்நாடு பொது வளாகங்கள் (அதிகாரமளிக்கப்படாத கையுடைமையாளர்களை வெளியேற்றுதல்) திருத்தச் சட்டம் .. | 21–22 |

**2010—ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 10—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க—காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2010**

**1951—ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

1. (1) இந்தச் சட்டம், 2010—ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

12—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் XX/1951.

2. 1951—ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின், 12—ஆம் பிரிவில், (2—AA) எனும் உட்பிரிவில், ''ஓர் இலட்சம்'' என்று வருகின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ''இரண்டு இலட்சம்'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

**நோக்க—காரண விளக்கவுரை**

தமது பதவி கால அளவு முடிவடைவதற்கு முன்பாக மரணமடைகிற சட்டமன்றப் பேரவையின் உறுப்பினரின் குடும்பத்தினருக்கு வழங்கத்தக்க ஒட்டுமொத்த தொகையை ரூபாய் 1,00,000/—லிருந்து ரூபாய் 2,00,000/—ஆக உயர்த்துவது என அரசு முடிவு செய்துள்ளது.

2. மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுப்பதற்கு, அரசானது 1951—ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தைத் (தமிழ்நாடு சட்டம் XX/1951) தக்கவாறு திருத்துவதென முடிவு செய்துள்ளது.

3. இச்சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

**மு. கருணாநிதி,**
*முதலமைச்சர்.*

**நிதி பற்றிய குறிப்பு**

இச்சட்டமுன்வடிவு சட்டமாக இயற்றப்படும்போது, மாநிலத் தொகு நிதியத்திலிருந்து செலவு செய்ய நேரிடும்.

2. எனினும், இச்சட்டமுன்வடிவின் வகைமுறைகளுக்குச் செயல்வடிவம் கொடுப்பதன் விளைவாக எவ்வளவு செலவு ஏற்படும் என்பது குறித்து இந்த நிலையில் எந்தக் கோணத்திலும் துல்லியமாக மதிப்பிடவியலாது.

**மு. கருணாநிதி,**
*முதலமைச்சர்.*

மா. செல்வராஜ்,
*செயலாளர்.*

**2010–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 10–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க–காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

## சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/2010

**2009–ஆம் ஆண்டு தமிழ்நாடு (நகராட்சிப் பகுதிகளில்) சொத்துரிமை மாற்றங்களின் மீதான தீர்வைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

**1.** (1) இந்தச் சட்டம், 2010–ஆம் ஆண்டு தமிழ்நாடு (நகராட்சிப் பகுதிகளில்) சொத்துரிமை மாற்றங்களின் மீதான தீர்வை திருத்தச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, 2010–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 13ஆம் நாளன்றே நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 32/2009.

5–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**2.** (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 2009–ஆம் ஆண்டு தமிழ்நாடு (நகராட்சிப் பகுதிகளில்) சொத்துரிமை மாற்றங்களின் மீதான தீர்வைச் சட்டத்தின் 5–ஆம் பிரிவிற்கான வரம்புரையானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு அவசரச் சட்டம் 4/2010.

நீக்கமும் காப்பும்.

**3.** (1) 2010–ஆம் ஆண்டு தமிழ்நாடு (நகராட்சிப் பகுதிகளில்) சொத்துரிமை மாற்றங்களின் மீதான தீர்வை திருத்த அவசரச் சட்டமானது இதன்மூலம் நீக்கம் செய்யப்படுகின்றது.

(2) அவ்வாறு நீக்கம் செய்யப்பட்டிருக்கின்ற போதிலும், மேற்சொன்ன அவசரச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் எதுவுமோ அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவுமோ இந்தச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி செய்யப்பட்டுள்ளதாகவோ அல்லது எடுக்கப்பட்டுள்ளதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்.

**நோக்க—காரண விளக்கவுரை**

2009—ஆம் ஆண்டு தமிழ்நாடு (நகராட்சிப் பகுதிகளில்) சொத்துரிமை மாற்றங்களின் மீதான தீர்வைச் சட்டமானது (தமிழ்நாடு சட்டம் 32/2009) மற்றவற்றுக்கிடையே, பேரூராட்சி ஒன்று அல்லாத பிற நகராட்சிப் பகுதி ஒன்றில் அமைந்துள்ள சொத்துரிமை மாற்றங்களைப் பொறுத்த அளவில் வசூலிக்கப்படும் முத்திரைத் தீர்வையின் மீதான மேல் வரியின் நூற்றுக்கு ஐம்பது விழுக்காடு என்ற அளவிலான தொகையைக் குறிப்பிட்ட சாலை கட்டமைப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக தமிழ்நாடு நகர்ப்புரச் சாலை கட்டமைப்பு நிதியில் வரவு வைப்பதற்கு வகை செய்கிறது. மேற்சொன்ன சட்டத்தின் 5—ஆம் பிரிவிற்கான வரம்புரையை விட்டுவிடுவதன் மூலம், நகராட்சிகளின் மற்றும் மாநகராட்சிகளின் நேர்வில் செய்வது போன்று, பேரூராட்சி ஒன்றிலும் அமைந்துள்ள சொத்துரிமை மாற்றங்களின் மீது வசூலிக்கப்படும் முத்திரை தீர்வையின் மீதான மேல் வரியின் நூற்றுக்கு ஐம்பது விழுக்காடு என்ற அளவிலான தொகையை தமிழ்நாடு நகர்ப்புரச் சாலை கட்டமைப்பு நிதியில் வரவு வைப்பதென தற்போது முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கிணங்கிய வகையில், 2010—ஆம் ஆண்டு தமிழ்நாடு (நகராட்சிப் பகுதிகளில்) சொத்துரிமை மாற்றங்களின் மீதான தீர்வை திருத்த அவசரச் சட்டமானது (தமிழ்நாடு அவசரச் சட்டம் 4/2010) 2010ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள்13—ஆம் நாளன்று ஆளுநரால் பிறப்பிக்கப்பட்டு அது 2010 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 13—ஆம் தேதியிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** சிறப்பிதழில் வெளியிடப்பட்டது.

2. இச் சட்டமுன்வடிவு மேற்சொன்ன அவசரச் சட்டத்திற்குப் பதிலாக அமைய விழைகிறது.

**மு.க. ஸ்டாலின்,**
*துணை முதலமைச்சர்.*

மா. செல்வராஜ்,
*செயலாளர்.*

**2010—ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 10—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க—காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/2010**

***1976—ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனச்) சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.***

இந்தியக் குடியரசின் அறுபத்து ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

**1.** (1) இந்தச் சட்டம், 2010—ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டம் என வழங்கப் பெறும்.

(2) இது 2010—ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 30—ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

குடியரசுத் தலைவரின் சட்டம் 25/1976.

4—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**2.** (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1976—ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனச்) சட்டத்தின் 4—ஆம் பிரிவில், (1)—ஆம் உட்பிரிவில் “முப்பத்து நான்கு ஆண்டுகள் இரண்டு திங்களுக்கு” என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, “முப்பத்து நான்கு ஆண்டுகள் எட்டு திங்களுக்கு” என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு அவசரச் சட்டம் 2/2010.

நீக்கமும் காப்பும்.

**3.** (1) 2010—ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்த அவசரச் சட்டமானது இதன்மூலம் நீக்கம் செய்யப்படுகின்றது.

(2) அவ்வாறு நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றபோதிலும், இந்த அவசரச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மை சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் எதுவுமோ அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவுமோ இந்த சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மை சட்டத்தின்படி செய்யப்பட்டுள்ளதாகவோ அல்லது எடுக்கப்பட்டுள்ளதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்.

**நோக்க–காரண விளக்கவுரை**

பட்டியலிடப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு 1976–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனச்) சட்டத்தின் (குடியரசுத் தலைவரின் சட்டம் 25/1976) 4–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவின்படி முதல் நிலையாக இரண்டு ஆண்டு கால அளவுக்கு தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். அத் தனி அலுவலர்களின் நியமனக் கால அளவானது அவ்வப்போது நீட்டிக்கப்பட்டு வந்து அது, 2010–ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 9–ஆம் நாளன்று முடிவடைவதாக இருந்தது.

2. அரசினால் ஏற்பளிக்கப்பட்டவாறான கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்துவதற்கான கால அட்டவணையின்படி முதல் கட்டத்தில் முதல் இரண்டு நிலைகளுக்கான தேர்தல்கள் முறையே, 2007–ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 7–ஆம் நாளன்றும், 2007–ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 11–ஆம் நாளன்றும் நடத்தப்பட்டன. இந்தத் தேர்தல்களின்போது நடைபெற்ற ஒரு சில நிகழ்வுகள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. இந்த நிகழ்ச்சிகள் இம்மாநிலத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களை நடத்தும் அடிப்படை நோக்கத்தையே தகர்ப்பதாக அரசு கருதுகிறது. அரசானது, கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை அவை எங்கெங்கெல்லாம் நடைபெற்றுள்ளனவோ அங்கெங்கெல்லாம் நீக்கம் செய்வதெனவும் அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் புதிய தேர்தல்களை நடத்துவது எனவும் முடிவு செய்து, அதற்கிணங்கிய வகையில் ஆணையிடப்பட்டுள்ளது. சட்டமன்றத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களையும் கலந்தாய்வு செய்த பின்னர் புதிய தேர்தல்களுக்கான புதிய தேர்தல் கால அட்டவணை ஒன்று உரிய முறையில் அரசினால் அறிவிக்கப்படும்.

3. எனவே, மேற்சொன்ன பட்டியலிடப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை நடத்த இன்னமும் அதிக காலம் ஆகும். எனவே அரசானது, மேற்சொன்ன பட்டியலிடப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கான தனி அலுவலர்களின் நியமனக் கால அளவை 2010–ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 9–ஆம் நாளுக்கும் அப்பால் மேலும் ஆறு திங்கள் கால அளவு ஒன்றுக்கு நீட்டிப்பது எனவும், மேற்சொன்ன சட்டத்தை அந்நோக்கத்திற்காகத் தக்கவாறு திருத்துவதெனவும் முடிவு செய்துள்ளது. அதற்கிணங்கிய வகையில் 2010–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்த அவசரச் சட்டமானது (தமிழ்நாடு அவசரச் சட்டம் 2/2010) 2010–ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 28–ஆம் நாளன்று, ஆளுநரால் பிறப்பிக்கப்பட்டு அது 2010–ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 30–ஆம் தேதியிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** சிறப்பிதழில் வெளியிடப்பட்டது.

4. இச்சட்ட முன்வடிவு மேற்சொன்ன அவசரச் சட்டத்திற்குப் பதிலாக அமைய விழைகிறது.

**கோ.சி. மணி,**
*கூட்டுறவுத் துறை அமைச்சர்.*

மா. செல்வராஜ்,
*செயலாளர்.*

**2010–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 10–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க–காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/2010**

**1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

1. (1) இந்தச் சட்டம், 2010–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 30/1983.

157–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. 1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 157–ஆம் பிரிவில்,–

(1). (1)–ஆம் உட்பிரிவில் ''தகவல்'' என்று வருகின்ற சொல்லுக்குப் பின்னர், ''அல்லது வேண்டுமென்றே தணிக்கை முடிவதற்கு உதவி செய்ய அல்லது உதவியாயிருக்கத் தவறுகிற அல்லது வேண்டுமென்றே பொதுநிலைக் கூட்டங்களை நடத்துவதற்குத் தவறுகிற அல்லது பதிவாளரின் சட்டமுறையிலான ஆணை அல்லது பணிப்பாணைக்குக் கீழ்ப்படியாமல் இருக்கிற அல்லது அதற்கு இணங்கி நடக்கத் தவறுகிற'' எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(2). (2)–ஆம் உட்பிரிவில், ''சங்கத்தின் உறுப்பினர் எவரும்'' என்று வருகின்ற சொற்றொடருக்குப் பின்னர் ''வேண்டுமென்றே தணிக்கைக்குத் தேவைப்படும் தகவலைக் கொடுப்பதற்குத் தவறுகிற அல்லது'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

**நோக்க—காரண விளக்கவுரை**

1983—ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 30/1983) தற்போது பின்வரும் குற்றச்செயல்களுக்கு தண்டனை விதிப்பதற்கான வகைமுறைகள் இல்லை, அதாவது:—

(*a*) நிருவாகக் குழுமமானது, வேண்டுமென்றே தணிக்கை முடிவதற்கு உதவி செய்ய அல்லது உதவியாயிருக்கத் தவறுதல் அல்லது வேண்டுமென்றே பொதுநிலைக் கூட்டங்களை நடத்துவதற்குத் தவறுதல் அல்லது பதிவாளரின் சட்டமுறையிலான ஆணை அல்லது பணிப்பாணைக்குக் கீழ்ப்படியாமல் இருத்தல் அல்லது அதற்கு இணங்கி நடக்கத்தவறுதல்; மற்றும்

(*b*) சங்கத்தின் அலுவலர், பணியாளர் அல்லது சம்பளம் பெறும் பணியாளர் அல்லது உறுப்பினர் எவரும் வேண்டுமென்றே தணிக்கைக்குத் தேவைப்படும் தகவலைக் கொடுப்பதற்குத் தவறுதல்.

எனவே, அரசானது மேற்சொன்ன குற்றச்செயல்களுக்கான தண்டனை வகைமுறைகளுக்கு வகை செய்வதெனவும் அந்நோக்கத்திற்காக மேற்சொன்ன 30/1983 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தைத் தக்கவாறு திருத்துவதெனவும் முடிவு செய்துள்ளது.

2. இச்சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**கோ.சி. மணி,**
*கூட்டுறவுத் துறை அமைச்சர்.*

மா. செல்வராஜ்,
*செயலாளர்.*

**2010–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 10–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க–காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/2010**

**1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

1. (1) இந்தச் சட்டம், 2010–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இஃது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 30/1983.

89–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. 1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 89–ஆம் பிரிவில் (1)–ஆம் உட்பிரிவிற்கான வரம்புரையில், "ஒன்பது ஆண்டுகள் ஆறு மாதங்கள்" என்று வருகின்ற சொற்றொடருக்குப் பதிலாக "பத்து ஆண்டுகள்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

**நோக்க—காரண விளக்கவுரை.**

தொடக்கநிலைக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவில் 2001—ஆம் ஆண்டு மே திங்கள் 25—ஆம் நாளிலிருந்தும், மைய மற்றும் உச்சநிலைக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவில் 2001—ஆம் ஆண்டு மே திங்கள் 26—ஆம் நாளிலிருந்தும் ஓராண்டுக்கால அளவிற்கு 1983—ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 89—ஆம் பிரிவின் (1)—ஆம் உட்பிரிவின்கீழ் தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். மேற்சொன்ன கால அளவிற்குள்ளாக மேற்சொன்ன கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை நடத்த இயலவில்லையாதலால் மேற்சொன்ன சட்டத்தைத் திருத்தியதன் மூலம் மேற்சொன்ன பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட தனி அலுவலர்களின் பதவிகால அளவானது 2010—ஆம் ஆண்டு மே திங்கள் 24—ஆம் நாளுக்கும் அப்பால் ஆறு மாதங்களைக் கொண்ட ஒரு கால அளவிற்குக் கடைசியாக நீட்டிக்கப்பட்டது. அவர்களின் நியமன கால அளவானது தொடக்க நிலைக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவில் 2010—ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 24—ஆம் நாளன்றும், மைய மற்றும் உச்சநிலைக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவில் 2010—ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 25—ஆம் நாளன்றும் முடிவடைவதாக உள்ளது.

2. கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்துவதற்காக அரசினால் ஏற்பளிக்கப்பட்டவாறான கால அட்டவணையின்படி முதல் கட்டத்தில் முதல் இரண்டு நிலைகளுக்காக தேர்தல்கள் முறையே, 2007—ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 7—ஆம் நாளன்றும், 2007—ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 11—ஆம் நாளன்றும் நடத்தப்பட்டன. இந்தத் தேர்தல்களின்போது நடைபெற்ற ஒரு சில நிகழ்வுகள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. இந்த நிகழ்ச்சிகள் இம்மாநிலத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களை நடத்தும் அடிப்படை நோக்கத்தையே தகர்ப்பதாக அரசு கருதுகிறது. அரசானது, கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை அவை எங்கெங்கெல்லாம் நடைபெற்றனவோ, அங்கெங்கெல்லாம் நீக்கம் செய்வதெனவும் அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் புதிய தேர்தல்களை நடத்துவது எனவும் முடிவு செய்து அதற்கிணங்கிய வகையில் ஆணையிட்டுள்ளது. சட்டமன்றத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களையும் கலந்தாய்வு செய்த பின்னர், புதிய தேர்தல்களுக்கான புதிய தேர்தல் கால அட்டவணை ஒன்று உரிய முறையில் அரசினால் அறிவிக்கப்படும்.

3. மேற்சொன்ன பொருட்பாட்டின் காரணமாக, தொடக்கநிலைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களை 2010—ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 24—ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னரோ நடத்த இயலாது. அனைத்துத் தொடக்க நிலைக் கூட்டுறவுச் சங்கங்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுமங்கள் அமைத்துருவாக்கப்பட்ட பின்னர் மட்டுமே மைய மற்றும் உச்சநிலைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களை நடத்தவியலும். எனவே, அரசானது அந்நோக்கத்திற்காக மேற்சொன்ன, சட்டத்தைத் தக்கவாறு திருத்துவதன் மூலம் தொடக்கநிலைக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவில் 2010—ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 24—ஆம் நாளுக்கு அப்பாலும், மைய மற்றும் உச்சநிலை கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவில் 2010—ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 25—ஆம் தேதிக்கு அப்பாலும் மேலும் ஆறு மாதங்களைக் கொண்ட ஒரு கால அளவிற்கு மேற்சொன்ன கூட்டுறவுச் சங்கங்களின் தனி அலுவலர்களின் பதவிக்காலத்தை நீட்டிப்பதென முடிவு செய்தது.

4. இச்சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

**கோ.சி. மணி,**
*கூட்டுறவுத் துறை அமைச்சர்.*

மா. செல்வராஜ்,
*செயலாளர்.*

**2010—ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 10—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க—காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/2010**

**அரசின் கீழ்வரும் பணிகளுக்கான நியமனங்களில் நேரடி ஆட்சேர்ப்புக்காக வகுத்துரைக்கப்பட்ட கல்வித் தகுதியை தமிழ் மொழி மூலமாகப் படித்துப் பெற்றிருக்கிற நபர்களுக்கு முன்னுரிமை வழங்க வகை செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

அரசமைப்பின் 345—ஆம் உறுப்பின்படி, மாநிலச் சட்டமன்றத்திற்கு அம்மாநிலத்தில் பயன்பாட்டில் உள்ள மொழிகளுள் ஏதேனும் ஒன்றை அல்லது அதற்கு மேற்பட்டவற்றை அந்த மாநிலத்தின் அரசு அலுவல் நோக்கங்களுக்காக ஏற்றுக் கொள்வதற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருப்பதாலும்;

தமிழ்நாடு மாநிலமானது, 1956—ஆம் ஆண்டு அரசு அலுவல் மொழிச் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் XXXIX/1956) இயற்றி, அரசமைப்பின் 345—ஆம் உறுப்பின்படி இம்மாநிலத்தின் அரசு அலுவல் மொழியாகத் தமிழ்மொழியை ஏற்றுக்கொண்டிருப்பதாலும்;

1963—ஆம் ஆண்டு அரசு அலுவல் மொழிகள் சட்டமானது (மையச் சட்டம் 19/1963) ஒன்றியத்தின் அனைத்து அரசு அலுவல் நோக்கங்களுக்காகவும் நாடாளுமன்றத்தின் அலுவல் நடவடிக்கைகளை நடத்துவதற்காகவும் ஆங்கில மொழி தொடர்ந்து இருப்பதற்கு வகை செய்வதாலும்;

19/1963 எனும் எண்ணிட்ட மையச் சட்டத்தின் 3(1)(b)எனும் பிரிவின் முதலாம் வரம்புரையானது ஒன்றியத்திற்கும் மாநிலங்களுக்கும் இடையிலான தகவல் பரிமாற்றத்திற்கு ஆங்கிலமொழி பயன்படுத்தப்படுதல் வேண்டும் என வகை செய்கிறது என்பதாலும்;

அரசமைப்பின் XVII எனும் பகுதியின் III—ஆம் அத்தியாயத்தில் உள்ள 348—ஆம் உறுப்பானது, அந்தப் பகுதியின் வகைமுறைகளில் என்ன அடங்கியிருந்த போதிலும், நாடாளுமன்றம் சட்டத்தினால் பிறவாறு வகை செய்யும் வரையில், உச்ச நீதிமன்றத்தின் மற்றும் ஒவ்வொரு உயர்நீதி மன்றத்தின் அனைத்து நடவடிக்கைகளும் ஆங்கில மொழியில் இருத்தல் வேண்டும் என வகை செய்வதாலும்;

தரப்பினர்களின் வாதுரைகளைத் தயாரிப்பது, சாட்சியம் எடுப்பது, முறையே தரப்பினர்களின் வழக்குரைஞர்கள் வாதம் செய்வது, தீர்ப்புரைகளை எழுதுவது உள்ளடங்கலாக, மாவட்டநிலை வரையிலான நீதிமன்றங்களின் மொழியாகத் தமிழ் மொழியானது பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதாலும்;

தமிழ்மொழி மூலமாகப் படித்தவர்கள் மைய அரசின், பிற மாநில அரசுகளின் அல்லது தனியார் துறை நிறுவனங்களின் பணிக்குத் தெரிவு பெறுவதற்கு மிக மிகக் குறைந்த வாய்ப்புகளைப் பெற்றுள்ளனர் என்பதால் மாநில அரசின் பணிகளில் அவர்களுக்கு முன்னுரிமை கொடுப்பது தேவையாகிறது என்பதாலும்;

அரசமைப்பின் 14—ஆம் உறுப்பின்படி, வெறும் வேறுபாடு அல்லது நடத்துவதில் சமமின்மை என்பதானது அதுவே, சமன்மையைப் பாதுகாக்கும் கூறு தடைசெய்யும் எல்லைக்குள்ளாக, வேறுபாடு என்பதாக ஆகாது என்பதாலும், இந்தக் கூறின் செயற்பாட்டினை ஈர்ப்பதற்கு, தெரிவு அல்லது வேறுபாடானது நியாயமற்றது அல்லது தன்னிச்சையானது என்பதாகவும் சட்டமன்றம் கருதியுள்ள நோக்கத்தைக் கருத்திற்கொண்டால் பகுத்தறிவுக்கு உகந்த அடிப்படை எதன் மீதும் அது அமையவில்லை என்பதாகவும் காட்டப்படுதல் தேவையானதாகும் என்பதாலும்;

நேரடி ஆட்சேர்ப்புக்காக வகுத்துரைக்கப்பட்ட கல்வித்தகுதியை தமிழ்மொழி வழிக் கல்வி மூலமாக பெற்ற நபர்களுக்கும் பிற மொழி வழியில் படித்த நபர்களுக்கும் இடையேயான வகைப்பாடானது, எய்த விழையும் நோக்கத்துடன் நியாயமான தொடர்பினைக் கொண்டுள்ளது என்பதாலும்;

அத்தகைய வகைப்பாடானது, அரசமைப்பின் 16—ஆம் உறுப்பின் எல்லைகளை மீறவில்லை என்பதோடு அதன்படியான இம்மாநிலத்தின் இட ஒதுக்கீட்டுக் கொள்கைக்கு ஊறு விளைவிக்கவில்லை என்பதாலும்;

அத்தகைய வகைப்பாட்டின் காரணமாக, அரசின் கீழ்வரும் பணிகள் எதற்குமான நியமனம் தொடர்பாக, ஒரே மாதிரியான தகுதிப்பாடுகளைக் கொண்டிருக்கிற அனைத்துக் குடிமக்களின் வாய்ப்பினைப் பொறுத்த வரையிலான சமன்மையானது மாற்றத்துக்கு உள்ளாகவில்லை என்பதாலும்;

1993–ஆம் ஆண்டு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கும் பட்டியல் சாதிகளையும், பட்டியல் பழங்குடிகளையும் சேர்ந்தவர்களுக்கும் (கல்வி நிலையங்களில் இடங்களையும் அரசின்கீழ் வருகின்ற பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளை ஒதுக்கீடு செய்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 45/1994) வகைமுறைகள் மீறப்படவில்லை என்பதாலும்;

தமிழ்மொழி வழியாகப் படித்த நபர்களுக்கு வேலை வாய்ப்புகள் வழங்கப்படவில்லையானால், இம்மாநில மக்கள் பள்ளியிலும் கல்லூரியிலும் தமிழ்மொழி மூலமாகக் கல்வி கற்பதனைத் தொடர்வதற்கு நோக்கெல்லை எதுவும் இருக்காது என்பதாலும்;

கல்வி நிலைகள் அனைத்திலும் மக்கள் தமிழ்மொழி மூலமாகக் கல்வி கற்றுக்கொள்வதனை விரும்பி ஏற்றுக்கொள்வதற்கு இணக்கமான சூழ்நிலையை நிலவச் செய்வதன் பொருட்டு, தமிழ்மொழி மூலமாகப் படித்த நபர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் அரசின் கீழ்வரும் பணிகள் எவற்றுக்கும் நியமனம் வழங்குவதானது பகுத்தறிவிற்கு உகந்ததொரு வகைப்பாடு என்பதாலும்;

இந்தியக் குடியரசின் அறுபத்து ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

**1.** (1) இந்தச் சட்டம், 2010–ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ்மொழி மூலமாகப் படித்த நபர்களை அரசின் கீழ்வரும் பணிகளில் முன்னுரிமை அடிப்படையில் நியமனம் செய்தல் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, 2010–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 7–ஆம் நாளன்றே நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

பொருள் வரையறைகள்.

**2.** இந்தச் சட்டத்தில் தறுவாய் பிறவாறு வேறுபொருள் குறித்தாலன்றி,–

(*a*) “நேரடி ஆட்சேர்ப்பு” என்றால் நடைமுறையில் உள்ள விதிகளுக்கு அல்லது ஒழுங்குமுறை விதிகளுக்கு அல்லது ஆணைகளுக்கு இணங்கிய வகையில் அரசின் கீழ்வரும் பணி எதற்கும் நபரொருவரை முதல் நியமனம் செய்தல் எனப் பொருள்படும்;

(*b*) “அரசு” என்றால் மாநில அரசு எனப் பொருள்படும்;

(*c*) “பிற மொழிகளின் மூலமாகப் படித்த நபர்கள்” என்றால் அரசின் கீழ்வரும் பணிகளில் நியமனம் எதற்கும் பொருந்தக்கூடிய விதிகளில் அல்லது ஒழுங்குமுறை விதிகளில் அல்லது ஆணைகளில் நேரடி ஆட்சேர்ப்புக்காக வகுத்துரைக்கப்பட்ட கல்வித்தகுதி அல்லது கல்வித் தகுதிகளை தமிழ் அல்லாத பிற மொழி எதனின் மூலமாகப் படித்துப் பெற்றுள்ள நபர்கள் எனப் பொருள்படும்;

(*d*) “தமிழ்மொழி மூலமாகப் படித்த நபர்கள்” என்றால் அரசின் கீழ்வரும் பணிகளில் நியமனம் எதற்கும் பொருந்தக்கூடிய விதிகளில் அல்லது ஒழுங்குமுறை விதிகளில் அல்லது ஆணைகளில் நேரடி ஆட்சேர்ப்புக்காக வகுத்துரைக்கப்பட்ட கல்வித்தகுதி அல்லது கல்வித் தகுதிகளைத் தமிழ்மொழி மூலமாகப் படித்துப் பெற்றுள்ள நபர்கள் எனப் பொருள்படும்;

(*e*) “முன்னுரிமைக்கான காலியிடங்கள்” என்றால், 3–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவின்கீழ் தமிழ்மொழி மூலமாகப் படித்த நபர்களுக்குக் கிடைக்கக்கூடிய அத்தகைய காலியிடங்கள் எனப் பொருள்படும்;

(*f*) அரசின் கீழ் வருகின்ற பணிகள் என்றால்,–

(i) அரசின் கீழும்;

(ii) இம்மாநிலத்திலுள்ள சட்டமன்றத்தின் கீழும்;

(iii) உள்ளாட்சி அதிகார அமைப்பு எதனின் கீழும்;

(iv) அரசுக்குச் சொந்தமான அல்லது அதன் கட்டுப்பாட்டிலுள்ள கழகம் அல்லது நிறுமம் எதிலும்; மற்றும்

(v) இம்மாநிலச் சட்டமன்றமானது, சட்டங்களை இயற்றுவதற்கு அதிகாரம் பெற்றிருக்கிற பிற அதிகார அமைப்பு எதனின் கீழும், வருகின்ற பணிகளை உள்ளடக்கும்.

நியமன முன்னுரிமை.

**3.** (1) அப்போதைக்கு நடைமுறையிலுள்ள சட்டம் எதிலும் என்ன அடங்கியிருந்த போதிலும், மற்றும் 5–ஆம் பிரிவிற்கு உட்பட்டு, நேரடி ஆட்சேர்ப்பின் மூலமாக நிரப்பப்படவேண்டியதாக உள்ள, அரசின் கீழ் வரும் பணிகளுக்கான நியமனங்களுக்கான அனைத்து காலியிடங்களிலும் தமிழ் மொழியின் மூலமாகப் படித்த நபர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் நூற்றுக்கு இருபது விழுக்காடு என்ற அளவிலான காலியிடங்கள் தனியே ஒதுக்கப்படுதல் வேண்டும்.

(2) (1)–ஆம் உட்பிரிவின்படியான நியமனங்களுக்கான தெரிவானது வகுத்துரைக்கப் படக்கூடிய அத்தகைய முறையில் செய்யப்படுதல் வேண்டும்.

(3) அரசின் கீழ் வரும் பணிகளுக்கான பதவிகளுக்கு நியமனம் செய்யும் நேர்வில், அந்தப் பதவிக்குப் பொருந்தக்கூடிய விதிகளில் அல்லது ஒழுங்குமுறை விதிகளில் அல்லது ஆணைகளில் வகுத்துரைக்கப்பட்ட கல்வித் தகுதியானது மொழி ஒன்றில் ஒரு பட்டம் அல்லது பட்டயம் அல்லது கல்விச் சிறப்பு எதுவும் என்பதாக இருக்கிற நிலையில், (1)–ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள எதுவும் பொருந்துதல் கூடாது.

**4.** தமிழ்மொழி மூலமாகப் படித்த நபர்கள், அரசின் கீழ் வரும் பணிகளுக்கான நியமனங்களில் பிற மொழி மூலமாகப் படித்த நபர்களுடன் முன்னுரிமைக்கான காலியிடங்கள் அல்லாத பிற காலியிடங்களுக்கும் போட்டியிடுவதற்கு உரிமைத் தகுதியுடையவராதல் வேண்டும். பிற காலி இடங்களுக்கு போட்டியிடுவதற்கான உரிமையானது பாதிக்கப்படுதல் கூடாது எனல்.

**5.** 3–ஆம் பிரிவின்கீழ் தமிழ்மொழி மூலமாகப் படித்த நபர்களுக்கு முன்னுரிமை அடிப்படையிலான நியமனமானது, நடைமுறையிலுள்ள சட்டத்தின்படியான இடஒதுக்கீட்டினைப் பின்பற்றிச் செய்யப்படுதல் வேண்டும். இட ஒதுக்கீடு பொருந்துதல்.

**6.** 3–ஆம் பிரிவில் என்ன அடங்கியிருந்தபோதிலும், முன்னுரிமைக் காலியிடங்களில் நியமிப்பதற்குத் தமிழ் மூலம் படித்த தகுதி வாய்ந்த மற்றும் பொருத்தமான நபர்கள் போதுமான அளவிற்கு இல்லையானால், அவ்வாறு நிரப்பப்படாத காலியிடங்கள் அவர் தம் வகைப்பாட்டிற்குள் பிற மொழிகள் மூலமாகப் படித்த நபர்களைக் கொண்டு நிரப்பப்படுதல் வேண்டும். முன்னுரிமை ஒதுக்கீட்டில் காலியிடங்களை நிரப்புதல்.

**7.** அரசானது, நியாயமான மற்றும் நேர்மையான காரணங்களுக்காக, பொது அல்லது தனி ஆணையின் மூலமாக அரசின் கீழ் வரும் பணிகளுக்கான நியமனம் அல்லது பதவி எதையும் இந்தச் சட்டத்தின் வகைமுறைகளிலிருந்து விலக்களிக்கலாம். விலக்களிப்பதற்கான அதிகாரம்.

**8.** (1) அரசானது, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான விதிகளைச் செய்யலாம். விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

(2) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகள் அனைத்தும் ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படுதல் வேண்டும்; மற்றும் ஒரு குறிப்பிட்ட நாளன்று நடைமுறைக்கு வருதல் வேண்டுமென வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டால் அன்றி அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளன்றே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி அல்லது பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை அல்லது ஆணை ஒவ்வொன்றும் அது செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்பு கூடிய விரைவில் சட்டமன்றப்பேரவையில் வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அது அவ்வாறு வைக்கப்படும் கூட்டத்தொடரோ அல்லது அதற்கு அடுத்துவரும் கூட்டத்தொடரோ முடிவடைவதற்கு முன்பு அப்பேரவை அத்தகைய விதி, அறிவிக்கை அல்லது ஆணை எதிலும் மாறுதல் எதனையும் செய்யுமாயின் அல்லது அப்பேரவை அந்த விதி, அறிவிக்கை அல்லது ஆணை செய்யப்படுதல் கூடாது அல்லது பிறப்பிக்கப்படுதல் கூடாது என்று முடிவு செய்யுமாயின் அவ்விதி அல்லது அந்த அறிவிக்கை அல்லது அவ்வாணை அதற்குப் பின்னர் அவ்வாறு மாறுதல் செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே நடைமுறைக்கு வருதல் வேண்டும் அல்லது நேர்விற்கேற்ப நடைமுறைக்கு வராது போதல் வேண்டும். எனினும், அத்தகைய மாறுதலோ, நீக்கமோ அந்த விதி, அறிவிக்கை அல்லது ஆணையின்படி முன்னரே செய்யப்பட்ட எதனின் செல்லும் தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

**9.** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயற்படுத்துவதில் இடர்ப்பாடு ஏதேனும் எழுமானால், அரசானது, ***தமிழ்நாடு அரசிதழில்*** ஆணை ஒன்றை வெளியிடுவதன் மூலம் அந்த இடர்பாட்டை நீக்குவதற்குத் தேவையானதாகவோ அல்லது உகந்ததாகவோ தனக்குத் தோன்றக்கூடிய இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத அத்தகைய வகைமுறைகளைச் செய்யலாம்: இடர்பாட்டினை நீக்குவதற்கான அதிகாரம்.

***வரம்புரை:*** ஆனால், அத்தகைய ஆணை எதுவும், இந்தச் சட்டமானது ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் முடிவடைந்ததற்குப் பின்னர் செய்யப்படுதல் கூடாது.

தமிழ்நாடு அவசரச் சட்டம் 3/2010. **10.** (1) 2010–ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ்மொழி மூலமாகப் படித்த நபர்களை அரசின் கீழ்வரும் பணிகளில் முன்னுரிமை அடிப்படையில் நியமனம் செய்தல் அவசரச் சட்டமானது இதன் மூலம் நீக்கம் செய்யப்படுகின்றது. நீக்கமும் காப்பும்.

**(2)** அவ்வாறு நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றபோதிலும், மேற்சொன்ன அவசரச் சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் எதுவுமோ அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவுமோ இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்டுள்ளதாகவோ அல்லது எடுக்கப்பட்டுள்ளதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்.

**நோக்க–காரண விளக்கவுரை.**

2500 ஆண்டுகளுக்கு முன்பே இருந்த நிலையில், மொழிகளுள் மிகப் பழமையான மொழியாக விளங்குவதும் செம்மொழிக்கு உள்ள அனைத்துப் பண்புகளையும் பெற்றுள்ளதுமான தமிழ் மொழியானது, 2004–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 12–ஆம் நாளன்று இந்திய அரசினால் செம்மொழி என்பதாக விளம்பப்பட்டுள்ளது.

2. தமிழ்மொழி பெற்றுள்ள செம்மொழி என்பதான தகுநிலையைக் கொண்டாடும் வகையில் தமிழ்நாடு அரசானது, 2010–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 23–ஆம் நாளிலிருந்து 27–ஆம் நாள் வரை ஐந்து நாள்கள் என்பதான கால அளவிற்கு கோயம்புத்தூரில் உலகச் செம்மொழி தமிழ் மாநாட்டினைக் கூட்டியது.

3. உலக அளவில் ஐம்பதுக்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து தமிழ்ச் சான்றோர்கள் மேற்சொன்ன மாநாட்டில் கலந்து கொண்டு, உலக மொழிகளில் எல்லாம் தமிழ்மொழி பழமையானது என்பது குறித்து மட்டுமல்லாமல் இலக்கியத்திலும், இலக்கணத்திலும் தமிழின் செம்மை குறித்தும் ஆராய்ச்சிக் கட்டுரைகளை முன்வைத்தனர்.

4. 2010–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 27–ஆம் நாளன்று நடைபெற்ற நிறைவு நாள் விழாவில் நிறைவேற்றப்பட்ட பல்வேறு தீர்மானங்களில் ஒன்று, இந்திய அரசமைப்பின் மற்றும் இங்கு நடைமுறையில் உள்ள பிற சட்டங்களின் வகைமுறைகளுக்கு இணங்கிய வகையில், இங்கு வாழும் பொது மக்கள் பேசும் மொழியில் வெளிப்படையாகவும் ஒளிவின்மை என்பதான முறையிலும் இம்மாநிலத்தின் நிர்வாகத்தை நடத்துகிற முக்கிய நோக்கத்துடன், அரசின்கீழ் வரும் பணிகளில் தமிழ் மூலமாகப் படித்தவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் நியமனம் வழங்குவது தொடர்பானது ஆகும்.

5. தமிழ்மொழி மூலமாகப் படித்தவர்கள் மைய அரசின், பிற மாநில அரசுகளின் அல்லது தனியார் துறை நிறுவனங்களின் பணிக்குத் தெரிவு பெறுவதற்கு மிக மிகக் குறைந்த வாய்ப்புகளைப் பெற்றுள்ளனர். எனவே மாநில அரசின் பணிகளில் அவர்களுக்கு முன்னுரிமை கொடுப்பது தேவையாகிறது.

6. தமிழ்நாடு மாநிலத்திலுள்ள பெருமளவிலான பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் உள்ள பாடப் பிரிவுகள் தமிழ்மொழி மூலமாக நடத்தப்படுகின்றன என்பதான பொருட்பாட்டினைக் கருத்தில் கொண்டு அரசானது, தமிழ்மொழியின் மூலமாகப் படித்தவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் நியமனம் வழங்குவது தொடர்பான தீர்மானத்தைப் பரிசீலனை செய்து, தமிழ்மொழி மூலம் படித்தவர்களுக்கு, நேரடி ஆட்சேர்ப்பின் மூலம் நிரப்பப்படவேண்டிய, இம்மாநிலத்தின்கீழ் வரும் பணிகளுக்கான நியமனங்களில் எழும் காலி இடங்களில் நூற்றுக்கு இருபது விழுக்காடு என்பதான அளவினைத் தனியே ஒதுக்கி வைப்பதென முடிவு செய்துள்ளது. எனவே, அரசானது இந்நோக்கத்திற்காகச் சட்டம் ஒன்றைக் கொண்டுவருவதென முடிவு செய்துள்ளது. அதற்கிணங்கிய வகையில் 2010–ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ்மொழி மூலமாகப் படித்த நபர்களை அரசின் கீழ்வரும் பணிகளில் முன்னுரிமை அடிப்படையில் நியமனம் செய்தல் அவசரச் சட்டமானது (தமிழ்நாடு அவசரச் சட்டம் 3/2010) ஆளுநரால் பிறப்பிக்கப்பட்டு, அது 2010–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 7–ஆம் தேதியிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** சிறப்பிதழில் வெளியிடப்பட்டது.

7. இந்தச் சட்டமுன்வடிவு மேற்சொன்ன அவசரச் சட்டத்திற்குப் பதிலாக அமைய விழைகிறது.

**துரைமுருகன்,**
*அமைச்சர் (சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச் சாலைகள்).*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு**

இச்சட்டமுன்வடிவின் **3(2)**, **7**, **8**, **9** ஆகிய கூறுகள் அவற்றில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக விதிகளைச் செய்வதற்கு அல்லது நேர்விற்கேற்ப ஆணைகளைப் பிறப்பிப்பதற்கு அரசுக்கு அதிகாரமளிக்கின்றன.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி தனித்தன்மை வாய்ந்தவையல்ல.

**துரைமுருகன்,**
*அமைச்சர் (சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச் சாலைகள்).*

மா. செல்வராஜ்,
*செயலாளர்.*

**2010—ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 10—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க—காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/2010**

**1974—ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப்பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

1. (1) இந்தச் சட்டம், 2010—ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இஃது, அரசு, அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 13/1974.

முதலாம் இணைப்புப் பட்டியலுக்கான திருத்தம்.

2. 1974—ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் முதலாம் இணைப்புப்பட்டியலில் 8—ஆம் வகை மற்றும் அது தொடர்பான பதிவுகளில் பின்வரும் வரம்புரையானது, சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:—

"**வரம்புரை** : ஆனால் இயக்கூர்திகள் சட்டத்தின் 87(1) எனும் பிரிவின்கீழ் (a), (b) அல்லது (c) எனும் இனத்தில் சுட்டப்பட்ட நோக்கங்களுக்காக, தற்காலிக அனுமதி வழங்கப்பட்ட கல்வி நிறுவனப்பேருந்துகள் மற்றும் பிற இயக்கூர்திகளைப் பொறுத்த அளவில், பின்வரும் வீதங்களில் ஓட்டுநர் இருக்கை நீங்கலாக உள்ள பிற இருக்கைகளுக்குத் தனிவரி செலுத்துதல் வேண்டும்—

| | |
|---|---|
| (i) கல்வி நிறுவனப்பேருந்துகள், தொடர்புடைய அந்த நிறுவனத்தின் மாணவர்களையும், பணியாளர்களையும் ஏற்றிச் செல்லப் பயன்படுத்தப்படும்போது | ஏழு நாட்களுக்கு அல்லது அதன் பகுதிக்கு ஓர் இருக்கைக்கு ரூ.30/—. |
| (ii) பிற இயக்கூர்திகள், தொடர்புடைய நிறுவனத்தின் பணியாளர்களை ஏற்றிச் செல்லப் பயன்படுத்தப்படும்போது | ஏழு நாட்களுக்கு அல்லது அதன் பகுதிக்கு ஓர் இருக்கைக்கு ரூ.90/—. |
| (iii) மேற்சொன்ன (i) மற்றும் (ii)—ஆம் கூறுகளில் குறித்துரைக்கப்பட்டவையல்லாத பிற நோக்கங்களுக்காக, கல்வி நிறுவனப் பேருந்துகள் மற்றும் பிற இயக்கூர்திகள் பயன்படுத்தப்படும்போது | ஒரு நாளுக்கு ஓர் இருக்கைக்கு ரூ.30/—". |

**நோக்க – காரண விளக்கவுரை**

தற்போது, இயக்கூர்திகளை, இயக்கூர்தியின் உரிமையாளரின் வாணிகம் அல்லது வணிகம் தொடர்பாக நபர்களை ஏற்றிச் செல்லும் நோக்கத்திற்காக தனியார் சேவைக்கான இயக்கூர்தியாகப் பயன்படுத்துவதற்கு, அதற்கு கல்வி நிறுவனங்களின் மாணவர்களையும், பணியாளர்களையும் ஏற்றிச் செல்லும் நோக்கத்திற்காக, கல்வி நிறுவனப்பேருந்துகளைப் பயன்படுத்துவதற்கு, 1988–ஆம் ஆண்டு இயக்கூர்திகள் சட்டத்தின் (மையச் சட்டம் 59/1988) படி அனுமதிகள் வழங்கப்படுகின்றன மற்றும் 1974 –ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) முதலாம் இணைப்புப்பட்டியலின் 8–ஆம் வகையின்கீழ் வரி விதிக்கப்படுகின்றது.

2. தற்போது, மேற்சொன்ன மையச் சட்டத்தின்படி வழங்கப்பட்ட அனுமதியில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்கள் அல்லாத பிற நோக்கங்களுக்காக, மேற்சொன்ன இயக்கூர்திகள் பயன்படுத்தப்படுகின்றன என்பது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. மேற்சொன்ன இயக்கூர்திகள், அவ்வாறு தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுப்பதற்காக, மேற்சொன்ன மையச் சட்டத்தின் 87–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவின்கீழ் (a), (b) அல்லது (c) இனத்தின் சுட்டப்பட்ட நோக்கங்களுக்காக, தற்காலிக அனுமதியில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக, சாலையில் இயங்குகிற மேற்சொன்ன இயக்கூர்திகளைப் பொறுத்த அளவில், தனிவரி விதிக்கக் கருதப்பட்டுள்ளது. எனவே, அரசானது, கருதப்படும் நோக்கத்திற்காக, மேற்சொன்ன 13/1974 எனும் தமிழ்நாடு சட்டத்தினைத் திருத்துவதென முடிவுசெய்துள்ளது.

3. இந்தச் சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

**கே.என். நேரு,**
*போக்குவரத்துத் துறை அமைச்சர்.*

மா. செல்வராஜ்,
*செயலாளர்.*

**2010–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 10–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க–காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/2010**

**1975–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது வளாகங்கள் (அதிகாரமளிக்கப்படாத கையுடைமையாளர்களை வெளியேற்றுதல்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

1. (1) இந்தச் சட்டம், 2010–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது வளாகங்கள் (அதிகாரமளிக்கப்படாத கையுடைமையாளர்களை வெளியேற்றுதல்) திருத்தச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசு, அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 1/1976.

2–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. 1975–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது வளாகங்கள் (அதிகாரமளிக்கப்படாத கையுடைமையாளர்களை வெளியேற்றுதல்) சட்டத்தின் 2–ஆம் பிரிவில், (e) எனும் கூறில்,–

(1). (1)–ஆம் உட்கூறில், (ii) எனும் இனத்தில் இறுதியில் வருகின்ற ''மற்றும்'' என்னும் சொல்லானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

(2). (2)–ஆம் உட்கூறில், இறுதியில் ''மற்றும்'' என்னும் சொல்லானது சேர்க்கப்படுதல் வேண்டும்.

(3). (2)–ஆம் உட்கூறுக்குப் பின்னர், பின்வரும் உட்கூறானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:–

''(3) தமிழ்நாடு வஃக்பு வாரியத்திடம் பதிவு செய்யப்பட்ட வஃக்பு ஒன்றுக்குச் சொந்தமான வளாகங்கள் எவையும்''

**நோக்க–காரண விளக்கவுரை**

தற்போது 1975–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது வளாகங்கள் (அதிகாரமளிக்கப்படாத கையுடைமையாளர்களை வெளியேற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1976) 2–ஆம் பிரிவின் (e) எனும் கூறில் பொருள் வரையறை செய்யப்பட்டவாறான ‘‘பொது வளாகங்கள்’’ என்னும் சொற்றொடரின் பொருளில் வஃக்பு சொத்துக்கள் அடங்குவது இல்லை. வக்ஃப் சொத்துக்களை, தீமை செய்வதற்கு அஞ்சாத ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்தும் சமூக விரோதிகளிடமிருந்தும் பாதுகாப்பதன் பொருட்டு, ‘‘பொது வளாகங்கள்’’ எனும் சொற்றொடரில் பொருள் வரையறைக்குள்ளாக வக்ஃப் சொத்துக்களைச் சேர்க்கும் வகையில் மேற்சொன்ன 1/1976 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தை திருத்துமாறு தமிழ்நாடு வக்ஃப் வாரியமானது அரசைக் கேட்டுக்கொண்டுள்ளது. எனவே அரசானது, மேற்சொன்ன நோக்கத்திற்காக 1/1976 எனும் எண்ணிட்ட மேற்சொன்ன தமிழ்நாடு சட்டத்தைத் தக்கவாறு திருத்துவதென முடிவு செய்துள்ளது.

2. இச்சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**இ. பெரியசாமி,**
*வருவாய் மற்றும் வீட்டுவசதித் துறை அமைச்சர்.*

மா. செல்வராஜ்,
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.